## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 305 நாள்: 17.07.2026

**அண்ணாநகர் மண்டலத்திற்குப்பட்ட, இயந்திர வாகனங்கள் பனிமனை, டிவிஎஸ் கால்வாய், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், அரசு ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி ஆகியவற்றினை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (17.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அண்ணாநகர் மண்டலம், வார்டு-94க்குட்பட்ட டிவிஎஸ் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், இராஜமங்கலம், 1வது தெருவில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், 2வது தெருவில் உள்ள அரசு ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி, இயந்திர வாகனங்கள் பனிமனை உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, வட்டரா துணை ஆணையாளர் அலுவகலத்தில், வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மத்திய வட்டார ஆணையாளர் அவர்கள், கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவும், சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள், பணியாளர்கள் வருகை மற்றும் மக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் அலுவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**